## பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் - 2015

பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஐக்கிய அமெரிக்காவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் இலங்கை ஹட்டன் நஷனல் வங்கிக்கும் இடையில் கைசாத்திட 2013 யூலை 01 ஆந் திகதிய AP086903XX ஆம் இலக்கம் மற்றும் 2013 நவம்பர் 06 ஆந் திகதிய 3294 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் ஏற்றுமதிக் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சாகவிருந்த, தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் நீர் வழங்கல் வசதிகளை வடிவமைத்தல் நிர்மாணித்து மற்றும் விரிவாக்குதல் மூலம் பாதுகாப்பான குடிதண்ணீர் வசதிகளை வழங்குகலும் அதன் மூலம் அப்பகுதியில் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்கும் வறுமையை குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,809.51 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 91.37 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,356.53 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 64.89 மில்லியன் ஐக்கிய அமெரிக்காவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,213.98 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.26 மில்லியன் ஹட்டன் நஷனல் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதித் தொகை ரூபா 2,239 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17.22 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2012 திசெம்பர் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில்

சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றை தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலிற்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 அபிப்பிராயம்

---

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 2.2.1 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

---

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கோருதல் நோக்கத்திற்காக கடனளிக்கும் முகவருக்கு ரூபா 2,973.46 மில்லியன் பெறுமதியான மீளளிப்பு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம், மீள்பெறுகை விண்ணப்பங்களின் நேரொத்த பெறுமதி ரூபா 2,413.99 மில்லியன் ஆகும். செயற்திட்டமானது வித்தியாசத்தை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

---

### 3.1 நிதிகளின் பயன்பாடு

---

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரையானது | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐக்கிய அமெரிக்கவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 64.89 | 8,356.53 | 1,293.62 | 9.54 | 1,293.62 | 22.43 | 2,974.65 |
| ஹட்டன் நஷனல் | 9.26 | 1,213.98 | - | - | - | 9.26 | 1,213.98 |
| இலங்கை அரசாங்கம் | 17.22 | 2,239.00 | 150.00 | 0.72 | 79.84 | 1.73 | 191.48 |
| **மொத்தம்** | **91.37** | **11,809.51** | **1,443.62** | **10.26** | **1,373.46** | **33.42** | **4,380.11** |

பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் நோக்கங்களின் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு, ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டம் இன்மை காரணமாக, ரூபா 11,809.51 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 91.37 மில்லியனில், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 02 ஆண்டுகள் கடந்த பின்னர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 36.57 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,380.11 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33.42 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். மிகுதியாக இருக்கின்ற 01 ஆண்டும் 08 மாதங்களும் ஆன காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 57.95 மில்லியன் மிகுதித் தொகையின் பயன்பாட்டுச் சாத்தியத்தன்மையானது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்த முடியுமா என ஐயத்திற்கிடமாகவுள்ளது.

### 3.2. பௌதீக செயலாற்றல்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் ஒப்பந்த உடன்கடிக்கையை இறுதியாக்குவதற்கு எடுக்கப்பட்ட காலதாமதத்துடன் தொடங்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 25 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்ட மூல ஒப்பந்த உடன்படிக்கை திருத்தப்பட்டிருந்ததுடன் புதிய ஒப்பநத்தம் 2014 ஒக்தோபர் 24 இலேயே கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், நிர்மாண வேலைகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் மீளாய்வாண்டு இறுதியில் 90 சதவீதமாக இருந்தது.

### 3.3. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியளிப்பு மற்றும் அமுலாக்கல் நோக்கத்திற்காக இலங்கை அரசாங்கத்துடன் துணைநிலை கடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, துணைநிலை கடன் மீதான வட்டி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் கணிப்பீடு செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் மேந்தலைச் செலவினம் 20 சதவீதம் செயற்திட்டத்திடமிருந்து அவறிறிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 வரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அத்தகைய மேந்தலைச் செலவினம் ரூபா 4.53 மில்லியன் ஆகும்.

(இ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், காணிச் சுவீகரிப்பு நோக்கத்திற்கு பதுளை மாவட்டத்தில் பிரதேச செயலகங்களிற்கு ரூபா 20.15 மில்லியன் தொகை அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சுவீகரிக்கப்பட்ட காணியின் உரிமையாண்மை 2015 திசெம்பர் 31 வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.4. முரணான நடவடிக்கைகள்

---

பதுளை பகுதியில் மெதிரிய பிரதேச ஆதார நிலையத்திற்காக புதிய அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 3.49 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.